பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.லிட்.

மலர் : 16] சென்னை : மார்கழி 2 (16—12—68) திங்கள் ★ வெளியூர் : மார்கழி 3 (17—12—68) செவ்வாய் [இதழ் : 151

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

பிள்ளையோ பிள்ளை தொல்லையோ தொல்லை என்கிற நிலை ஏற்படாமல் குடும்பம் தெவிட்டாத இன்பமாக விளங்கவும், குழந்தைகள் அறிவு நிறைந்து, ஆற்றல் மிகுந்தவர்களாக இருக்கவும் அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்.

சனநாயகத்தைக் காக்க உதவுவீர்!

குறைகளைச் செயற்கையாக உருவாக்க வேண்டாம்!

பத்திரிகைகளுக்கு அண்ணா வேண்டுகோள்

சென்னை, டிச. 16 —

"ஒரே பிரச்சினை மீது பல்வேறு வகையான கருத்துக்கள் - விமர்சனங்கள் இப்போது வெளியிடப்படுகின்றன; இப்போதெல்லாம் பொதுமக்கள் தெரிவிக்கும் குறைகளை விடச் செயற்கையாக உருவாக்கப்படும் குறைபாடுகள் தான் அதிகம்; எனவே பத்திரிகைகள், உண்மைகளை மட்டும் பகுத்துத் தொகுத்து விஞ்ஞான ரீதியில் விமர்சனம் செய்தால், அது சனநாயகத்தைக் காப்பாற்றும் அரணாக அமையும்.

"செய்திகளை அப்படியே வெளியிடுவது என்ற அடிப்படையைப் பத்திரிகைகள் பின்பற்றினாலும், அந்தச் செய்திகளுக்குப் பின்னணியையும் ஆராய வேண்டும். சுதந்தரம் பெற்று 20 ஆண்டுகள் ஆன பின்னரும், இன்னமும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. 1947-ம் ஆண்டில் எந்த உருவில் அவை இருந்தனவோ அதே நிலையில் உள்ளன.

"இந்தப் பிரச்சினைகளை நிதானத்துடன் — நாசுக்கான முறையிலும் அரசியல் சட்டத்திற்குட்பட்டும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பத்திரிகைகள் தங்கள் கருத்துக்களை வகுத்து ஒருமுனைப்படுத்தித் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட வேண்டும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் 'மெயில்' ஆங்கில இதழின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றுகையில் வலியுறுத்தினர்கள்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"ஆசியாவில் 500 இலட்சம் பத்திரிகைகள் நாள்தோறும் விற்பனையாகின்றன; இதில், 450 இலட்சம் ஜப்பானில் மட்டும் விற்பனையாகின்றன. 60 இலட்சம் நாளிதழ்கள்தான் நமது நாட்டில் விற்கின்றன.

பத்திரிகைகளை வாங்கிப் படிக்கும் பழக்கத்தை நமது மக்கள் மேற்கொள்ள வேண்டும். நமது மக்கள் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பத்திரிகைகள் விற்பனை மிகச் சொற்பம். இந்த நிலைமை நீடித்தால் பத்திரிகைகள் பொதுமக்களது உண்மையான கருத்துக்களை எதிரொலிப்பவையாக அமையா."

'மெயில்' நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டுப் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. கே. கே. ஷா பேசினர்.

திரு. ஏ. சிவசைலம் அனைவரையும் வரவேற்றர்.

'மெயில்' ஆசிரியர் திரு. டி. ஏ. சுப்பிரமணியம், "எந்தப் பகுதியிலிருந்து இடை ஞ்சல் வந்தாலும், நடுநிலை தவருது துணிந்து கருத்துக்களை வெளியிடுவோம்" எனத் தமது நன்றியுரையில் தெரிவித்தார்.

விழாவிற்கு அமைச்சர்கள் திருமதி சத்தியவாணிமுத்து, திரு. ஏ. கோவிந்தசாமி, திரு. செ. மாதவன், மற்றும் திரு. சி. சுப்பிரமணியம் உட்பட ஏராளமான நகரப் பிரமுகர்கள் வந்திருந்தனர்.

அமைச்சர் மு. கருணாநிதி உடல்நிலை

சென்னை, டிச. 16—

பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களின் உடல்நிலையைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஒரு வார காலத்திற்கு எந்தவித நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளாமல் முழு ஓய்வெடுக்க வேண்டுமெனக் கூறியுள்ளனர்.

அந்த ஆலோசனைப்படி ஒரு வார காலத்துக்கு முழு ஓய்வெடுத்துக் கொள்ள அமைச்சர் மு. கருணாநிதி முடிவு செய்திருக்கிறர்.

கோயில்களின் வருமானம் அதிகரிப்பு

அமைச்சர் நெடுஞ்செழியன் தரும் தகவல்

மதுரை, டிச. 16—

"கோவில்களின் பூசைச் செலவுகளைக் குறைக்காமல், அவை போக பாக்கியுள்ள கோவில்களின் நிதியைத்தான் கல்வி-மருத்துவம் போன்றவைகளுக்குச் செலவிட வேண்டும்"

என்று இந்து அறநிலையத் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மீனட்சி சுந்தரேசுவரர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் கூறினர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"பல கோவில்களின் வருமானம் பெருகிவருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்; உதாரணமாக, பழனி கோவிலின் வருமானம் ஆண்டுக்கு ரூ. 8 இலட்சத்திலிருந்து ரூ. 30 இலட்சமாக அதிகரித்திருக்கிறது. அதேமாதிரி திருத்தணி கோவிலின் வருமானமும் ரூ. 3 இலட்சத்திலிருந்து ரூ. 9 இலட்சமாகி இருக்கிறது; அங்கு ஒரு கலைக்கல்லூரி ஆரம்பிக்கவும் முயற்சி நடக்கிறது."

கொல்லைப்புறமாக இந்தி ஆதிக்கத் திணிப்பு

டில்லி அரசில் உள்ள ஆதிக்கவாதிகள் ஏற்பாடு

தமிழக மக்களின் ஐயஉணர்வு--மத்திய அமைச்சரிடம் விளக்கம்

சென்னை, டிச. 16 —

வானொலியில் இந்திச் செய்தி அறிக்கைக்கு முதலிடம் தரப்பட்டுள்ளதன் மூலம் இந்தி ஆதிக்கத் திணிப்புக்கு வழிசெய்யப்பட்டுள்ளது என்பதை, மத்திய செய்தி--ஒலிபரப்புத் துறையமைச்சர் திரு. கே. கே. ஷாவிடம் நேரிலேயே கூறி கண்டனம் தெரிவித்தார்— தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள்.

சென்னை வந்திருந்த திரு. கே. கே. ஷா நேற்று அண்ணா அவர்களை, நுங்கம்பாக்கம் இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக்குப்பின் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :—

"வானொலியில் இந்திச் செய்தி அறிக்கைக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது பற்றித் தமிழக மக்கள் அடைந்துள்ள மனக் கொதிப்பை அமைச்சர் ஷாவிடம் எடுத்துரைத்தேன்.

"இதுபற்றித் தமிழக அரசு அனுப்பியுள்ள கடிதத்துக்கு மத்திய செய்தி—ஒலிபரப்புத் துறை அமைச்சரின் பதிலை மாநில அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கடிதம் பரிசீலிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் ஷா தெரிவித்தார்."

இந்தச் சந்திப்பு 10 நிமிட நேரமே நடைபெற்றது.

மேலும் இப்பிரச்சினை குறித்து விரிவாக மத்திய அமைச்சரிடம் எடுத்துரைக்குமாறு செய்தித் துறையமைச்சர் சத்தியவாணி முத்துவிடம் கூறியிருப்பதாகவும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

சத்தியவாணிமுத்து சந்திப்பு

பிறகு, செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், அமைச்சர் ஷாவைச் சந்தித்து, நிலைமையை விரிவாக விளக்கினர்.

கே. கே. ஷா பேட்டி

திரு. கே. கே. ஷா, அண்ணா அவர்களைச் சந்தித்தபின், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

"முதலமைச்சர் தமது கருத்தை என்னிடம் தெரிவித்தார்; நான் மத்திய அரசின் கருத்தை அவரிடம் கூறினேன். முதலமைச்சரின் கருத்தைத் தலைமையமைச்சரிடம் எடுத்துக் கூறுவேன்.

"காங்கிரசல்லாத மற்ற மாநில அரசுகளோடித் தமிழக அரசுடன் மத்திய அரசுக்குச் சுமூகமான தொடர்பு நிலவிவருகிறது. இதற்கு ஊறு நேரும் வண்ணம் எதுவும் நடக்காதபடி பார்த்துக்கொள்வோம்.

"தமிழக மாணவர்கள் என்னிடம் அன்பு செலுத்தியுள்ளனர்; ஏனெனில், அவர்கள் எனக்குக் கறுப்புக்கொடி காட்டவில்லை. அடுத்த தடவை வரும்போது அவர்களைச் சந்திப்பேன்.

"வானொலியில் இந்திச் செய்தி ஒலிபரப்பப்படுவது தொடர்பாக விரைவில் ஓர் உடன்பாடு ஏற்படும் என்று உறுதியாக நம்புகிறேன்."

தமிழக அரசின் கடிதம்- அண்ணா விளக்கம்

சென்னை, டிச. 16—

"வானொலியில் இந்திச் செய்திக்கு முதலிடம் தரப்பட்டிருப்பது குறித்து, தமிழக அரசு

(4-ம் பக்கம் பார்க்க)

நாடகத்துறை வளர்ச்சிக்கு அண்ணா யோசனை

முதல் காணிக்கை தந்தார் ஏ.வி.எம்.

சென்னை, டிச. 16—

"நாடகத்துறை வளர்ச்சிக்கு அரசின் பங்கு என்ன என்பதைச் சென்ற ஆண்டிலேயே நான் தெரிவித்தேன்; 'ஒரு திரைப் படம் எடுக்க ரூ. 20 இலட்சம் செலவு செய்கிறர்கள்; அதில் பத்தாயிரம் ரூபாயை நாடக வளர்ச்சிக்கென்று திரைப் படத் தயாரிப்பாளர்கள் ஒதுக்கினால், அதற்குச் சமமான தொகையை அரசு தரும்' என்று கூறினேன். அந்தத் தொகையைக்கொண்டு நாடக நடிகர்கள் நலிந்து போகாமல் காப்பாற்றலாம்; நாடகமும் வளரும்-- அதன் மூலம் திரைப் படத் துறையும் வளரும்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், சிவாஜி கணேசன் பாராட்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்கள்.

விழாவின் இறுதியில் பேசிய திரு. ஏ. வி. மெய்யப்பன் அவர்கள், இப்பொழுது வெளிவந்துள்ள தமது தமிழ்ப் படத்தின் சார்பாக ரூ. 10,000 அளிப்பதாக அறிவித்தார்.

அண்ணா சிகிச்சை நிதிக்கு ரூ. 21,633

சென்னை மாவட்டத்தின் காணிக்கை

சென்னை, டிச. 16—

பேரறிஞர் அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்காக சென்னை மாவட்ட தி. மு. கழகம் தனது காணிக்கையாக ரூ 21,633-ஐ கழகப் பொருளாளர் மு. கருணாநிதியிடம் அளித்தது.

சென்னை 36-வது வட்டத்தில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், இந்தத் தொகையைக் கழகப் பொருளாளரிடம் அளித்தார்.

குழந்தைகள் நலனுக்கு 'யூனிசெப்' உதவி

புதுதில்லி, டிச. 14—

இந்தியாவில், குடும்ப – குழந்தைகள் நலத் திட்டத்துக்காக 'யூனிசெப்' நிறுவனம், 3,70,000 டாலர் உதவும் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாயிற்று.

சாதனங்கள், பயிற்சி நிலையங்கள் அமைப்பு வகையில் இந்த நிதி உதவப்படும்.

மாணவர் குறை தீர்க்கும் மன்றம் நிறுவப்படுவது அவசியம்

கட்டுப்பாடின்மையைக் களைவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்

மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் யோசனை

மதுரை, டிச. 16—

"மாணவர்களிடையே அமைதியின்மை நிலவுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து -- அவற்றினைக் களைந் தெறிவதற்கு ஒவ்வொரு கல்வி நிலையங்களிலும் மாணவர் பிரதிநிதிகள் கொண்ட 'மாணவர் குறை தீர்க்கும் மன்றம்' நிறுவலாம்; மாணவரிடையே காணப்படும் கட்டுப்பாடின்மைகளைக் களைவதற்கு இது உதவியாக இருக்கும்.

"மாணவர்களிடமிருந்து வரும் புகார்களையும், குறைகளையும் மாணவர் குறை தீர்க்கும் மன்றம் பரிசீலித்து, 'புகார்கள் ஆதாரமற்றவை' என்று அது கருதினால் அவற்றை நிராகரித்துவிட வேண்டும்; புகார்கள் உண்மையாக இருந்தால் அவற்றிற்குப் பரிகாரம் காண அம்மன்றம், கல்விக்கூடத் தலைவரை அணுக வேண்டும். கல்வி நிலைய நிர்வாகிகள் -- மாணவர்கள் ஆகியோரின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் ஒரு ஆசிரியர் நடுவராக இருந்து இப்பணியைச் செய்யலாம்."

இவ்வாறு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், டிச. 14-ம் நாளன்று மதுரைப் பல்கலைக் கழக இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில் யோசனை கூறினார்.

சனநாயக முறையில் பிரச்னைகளை அணுக...

மாணவர்களிடையே அமைதியின்மை நிலவுவது, தமிழகத்தில் மட்டுமன்று; நாடு முழுவதிலும் -- ஏன் உலகம் எங்கும் மாணவர்களிடையே அமைதியின்மை நிலவுகிறது.

தமிழகம் சம்பந்தப்பட்டவரையில் பெரும்பான்மையான மாணவர்கள் இயன்ற அளவுக்கு ஒழுங்கு விதிகளை எப்பொழுதும் பின்பற்ற முயற்சிக்கின்றனர்.

கட்டுப்பாடின்மை ஏன் வளருகிறது என்பதைக் கண்டு பிடித்து--அதைக் களைவதற்கான முயற்சிகளைச் செய்து --- ஒரு நல்ல சூழ்நிலையைத் தோற்றுவிப்பது, மாணவர்கள் -- அரசு ஆகிய இருதரப்பினரின் கடமையாகும்; 'கிளர்ச்சிகள் செய்வதைவிட சனநாயக முறைகளில் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிப்பது தான் நல்லது' என்பதை, மாணவர்கள் உணரும்படி செய்யவேண்டும்.

அரசியலில் மாணவர் ஈடுபடுவது அவசியமா

'மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்தக்கூடாது' என்ற ஒரு கருத்து கூறப்படுகிறது; இந்தியா போன்ற சனநாயகம் நிலவும் நாட்டில் அரசியலில் மாணவர்கள் அக்கறை காட்டுவதைத் தடுப்பது சாத்தியமல்ல; என்றாலும், அரசியலில் மாணவர்கள் ஈடுபடுவது அவர்களுக்கே விபரீதமாக இருக்கும்.

ஒப்புதல் உண்டு --- எனினும் அவசரம் கூடாது!

தமிழ்நாட்டு மாணவர்கள் தாய் மொழியான தமிழிலும், உலக மொழியான ஆங்கிலத்திலும் நன்கு பயிற்சிபெற்றிருத்தல் அவசியமாகும்.

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் தமிழ் மொழிதான் பயிற்சிமொழியாக இருக்க வேண்டுமென்பதை இந்த அரசு முழு அளவுக்கு ஒப்புதல் அளிக்கிறது; ஆனால் தமிழைப் பயிற்சிமொழியாக்குவதில் அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்தல் கூடாது. படிப்படியாகத் தமிழைப் பயிற்சிமொழியாக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சி மெதுவாகவும் இதில் செல்லக் கூடாது.

படித்தவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்

கல்வி வளர்ச்சிக்காக 1968-69-ம் ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 50 கோடியும், மருத்துவ வசதிக்காக ரூ. 15 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது; எனினும் எழுத்தறிவின்மையை ஒழிப்பதில் இன்னும் கணிசமாக நாம் முன்னேறவில்லை. இந்த மாநில மக்களில் 42-சதவிகிதம் பேர்களுக்கே எழுதப் படிக்கத் தெரியும். படித்தவர்கள் -- படிக்காதவர்கள் இடையே நிலவும் பாகுபாட்டைச் சரிசெய்ய, படித்தவர்கள் கடுமையாக உழைக்கவேண்டும்.

பல்கலைக் கழகங்கள் ஈடுபடுவது அவசியம்

கலையும், விஞ்ஞானமும் மனிதனது இரு கண்கள் போன்றவை. பண்பாட்டையும், நாகரீகத்தையும் வளர்க்க மனிதனுக்கு இவ்விரண்டும் அவசியமே. ஆகவே பல்கலைக் கழகங்கள், கலை -- விஞ்ஞான வளர்ச்சியில் ஈடுபட வேண்டும்.

சிரமதானத்தில் ...

'அநீதியை-அக்கிரமத்தை எதிர்ப்பதில் அயராது அரும் பணியாற்றுகிறார்'

மூதறிஞர் இராஜாஜி பணிபற்றி அறிஞர் அண்ணா

சென்னை, டிச. 16—

"இராஜாஜி அவர்கள், ஒவ்வொரு பிரச்சினையையும் மிகத் தெளிவாக அறிந்துவைத்திருக்கிறார்; திருக்குறளுக்கு உரை எழுதியிருக்கிறார்; அவரது உரை தனித்தன்மை வாய்ந்தது; அந்தத் தனித் தன்மைக்குக் காரணம், அவருடைய கூர்ந்த மதிதான். அவரது சிந்தனையும் செயலும் மார்க்க அரேலியரைப் பின்பற்றியவையாகும்.

இராஜாஜியைப் போன்று பெரிய நிலையை அடைந்தவர்கள், சிறிய சிக்கல்களையெல்லாம் ஒதுக்கிவிடுவார்கள். 'சிறு பொறிதான் பெரு நெருப்பாகும்' என்பதை உணர்ந்த இராஜாஜி, பிரச்சினைகளில், சிறியது—பெரியது என்ற பாகுபாடு பார்க்காமல் அவைகளைத் தீர்ப்பதற்குத் தம்முடைய கருத்தைச் செலுத்துவார்.

இராஜாஜி செய்யவேண்டிய சேவைகளையும், கடமைகளையும் செய்துவிட்டபோதிலும், இப்பொழுதும் தீவிரமாகச் சிந்தனையைச் செலவிடுவதற்குக் காரணம், தவறு ஏற்பட்டுவிட்டால் அதற்குத் தாமும் உடந்தையாக இருந்துவிடக் கூடாது என்பதும், தவற்றை இடித்துக்காட்ட வேண்டும் என்ற உணர்வும் இருப்பதுதான்.

காலமும், உலகமும் தன்னைக் கேட்கும் என்பதால்தான், அக்கிரமத்தையும் அநீதியையும் எதிர்ப்பதில் இந்த வயதிலும் தம்மை அவர் ஒப்படைத்துக்கொண்டிருக்கிறார். அவருக்குப் பல எதிர்ப்புகள் ஏற்பட்டபோதிலும் கலங்குவதில்லை. 'நாம் சொன்னால், யாரும் எதிர்க்க மாட்டார்கள்' என்ற எண்ணத்தில் அவர் பிரச்சினைகளை அணுகுவதில்லை.

நான் அவரிடத்தில் பெருமதிப்போடு கவனிப்பது யாதெனில் மக்கள் எல்லோரையும் சிந்திக்கும்படி செய்திருக்கிறார் என்பதேயாகும். இதுவே இராஜாஜி அவரது வாழ்க்கையில் பெற்றுள்ள மகத்தான வெற்றிகளில் தலையாயது.

உலக சமாதானத்துக்காக அவர் அயல் நாட்டுப் பயணம் மேற்கொண்டார்; அணுகுண்டுகளைச் செய்து குவித்து வைத்திருந்த அமெரிக்க நாடு சென்று அந்நாட்டின் அதிபர் கென்னடியைச் சந்தித்தார்.

உலகுக்குச் சமாதானம் வேண்டுமென்பதற்காக அந்தப்பயணத்தை மேற்கொண்டவர், 'இந்தியாவினின்று சென்றார்' என்பது இந்த நாட்டினுக்குப் பெருமைமிகு அத்தியாயமாக விளங்கும். இராஜாஜி ஆற்றிய பணி அத்தகையது. அந்தக் காரியத்துக்கு ஈடான பெருமைமிக்கது, அவரது வரலாற்றிலும் வேறு இருக்க முடியாது.

உலகை மருட்டிய அணுகுண்டுப் பிரச்சினை குறித்து அமெரிக்காவின் அதிபரோடு அவர் பேசிவிட்டு வந்தது, உலக வரலாற்றில் இடம் பெறும்.

இந்த உலகில் ஒருநாள் போர் நிறுத்தம் ஏற்படும்; பயங்கரங்கள் நீடிக்காமல் உலகம் சாந்தி பூமியாக ஆகும். அதற்காகப் பெரு முயற்சி எடுத்தவர்களது பெயர்களில் இராஜாஜியின் பெயர் நிச்சயம் இடம் பெறும். இராஜாஜியின் இந்தச் சாதனைக்குக் கீழேதான் அவரது இதர சாதனைகள் -- அதாவது, கவர்னர் ஜெனரலாக இருந்தது -- கவர்னராக இருந்தது -- முதலமைச்சராக இருந்தது -- சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தது எல்லாம் எழுதப்படும்.

அப்படிப்பட்ட மாமேதையொருவர் வாழுகிற காலத்தில் நாம் வாழுகிறோம். இந்தக் காலத்தில் நாம் பயன்பெறாவிட்டால் இனி எந்தக் காலத்திலும் நாம பயன்பெற முடியாது.

மாமேதை ஒருவர் வாழ்ந்த நாட்களில் நாம் வாழுகிறோம் என்பதைவிட, இதுவரை அவரால் நாமடைந்த பலன்களை எண்ணி நம் நன்றியையும் அஞ்சலியையும், இந்த விழா நாளில் நாம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்."

—இராஜாஜியின் 91-வது பிறந்த நாள் விழாவில்

சிரமதானிகள் ...

வேலை தேடித்தரும் நிலையங்களில் இலஞ்ச ஊழல்

நாடாளுமன்றத்தில் உறுப்பினர் குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 15 —

"வேலை தேடித்தரும் நிலையங்களெல்லாம் பந்து விளையாடும் இடத்தைப்போலவே இயங்குகின்றன"

என்று, நாடாளுமன்ற மேலவையில், கம்யூனிஸ்டு உறுப்பினர் எம். வி. பாந்தராம் குற்றஞ்சாட்டினார்.

"வேலை காலியாக இருக்கும் இடங்களுக்கு அனுப்பப்படும் பட்டியலில் ஒருவருடைய பெயரைச் சேர்க்கவேண்டுமானால் அதற்காகப் பணம் கேட்கப்படுகிறது; இந்த இலஞ்சத்தை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்?"

என்று அவர், தொழிலாளர் நல அமைச்சரைக் கேட்டார்.

இதற்கு அமைச்சர் ஜெய சுக்லால் ஹாத்தி பதிலளிக்கையில், 'வேலை தேடித்தரும் நிலையங்கள் அனைத்துமே இப்படி இயங்குவதாக ஒப்புக்கொள்ள முடியாது' என்றார்.

சில இடங்களிலிருந்து அரசுக்குப் புகார்கள் வந்திருப்பதாகவும், தொடர்புடைய மாநில அரசுகட்கு அதுபற்றிக் கவனிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், வேலை தேடித்தரும் நிலையங்களின் நிர்வாகப் பொறுப்பை மாநில அரசுகளே ஏற்றிருப்பதாகவும், அவ்வப்போது வேலை தேடித்தரும் நிலையங்கள் கண்காணிக்கப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

'தேசிய வேலையமர்த்துத் துறை' மத்திய வேலையமர்த்துக் குழு ஆகியவற்றின் சிபாரிசுகள்பேரில, வேலை தேடித்தரும் நிலையங்கள் படிப்படியாக முன்னேறிவருகின்றன' என்றும் அவர் கூறினார்.

வேலை தேடித்தரும் நிலையங்களின் பணியை மேம்படுத்த வழிவகைகாணும் பொருட்டு தொழிலாளர்பற்றிய தேசீயக் குழு ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

திரு. மோகன்தாரியாவின் கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"வேலை தேடித்தரும் நிலையங்களுக்கு ஆகும் செலவில் 60 சதவிகிதத்தை மத்திய அரசும், எஞ்சியதை மாநில அரசும் ஏற்கின்றன.

"வேலை தேடித்தரும் நிலையங்களால் சிபாரிசு செய்து அனுப்பப்படுபவர்கள், வேலையில அமர்த்தப்படுவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

தி. மு. க. உறுப்பினர் திரு. சிட்டிபாபு கேள்விக்கு அமைச்சர் பதிலளித்ததாவது:—

"வேலை காலியானால் தெரிவிக்கும்படி பொதுத் துறை நிறுவனங்களும், தனியார் துறை நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன"

"வேலை தேடித்தரும் நிலையங்களால் அனுப்பப்படுபவர்களை கட்டாயமாக வேலைக்குவைத்துக்கொள்ளுமாறு அரசு வற்புறுத்த வேண்டும்"

என்று திரு. அரச்சுன் அரோரா கோரினார்.

"வேலை தேடித்தரும் நிறுவனத்தில் கட்டாயமாகப் பதிவு செய்யாதவரை இதனைச் செய்வதில் சில சங்கடங்கள் ஏற்படும்; எனினும் பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது" என்றார் அமைச்சர்.

"வேலை தேடித்தரும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுபற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது" என்றும் அவர் கூறினார்.

சிரணியினர் அமைக்கும் 4 மைல் நீளச் சாலை

அமைச்சர் கோவிந்தசாமி வேலையைத் துவக்கிவைத்தார்

விழுப்புரம், டிச. 14—

தென்னாற்காடு மாவட்டம் கீழ இருப்பு எனும் கிராமத்தில் சாலை வசதி இல்லாததால், அங்கு சிரணியினர் சாலை அமைக்கின்றனர்; இதற்கான பணியை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்தக் கிராமத்திலிருந்து மெயின்ரோடுக்கு இடையே மொத்தம் நான்கு மைல் தூரமிருக்கிறது; இந்த நான்கு மைல் நீளச் சாலை முழுவதையும் சிரணியினர் அமைக்கின்றனர்.

சாலை அமைக்கும் வேலையை தொடங்கி வைப்பதற்குமுன் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், மண்வெட்டியால் மண்ணை வெட்டி வேலையைத் தொடங்கி வைத்தார்.

வெளிநாட்டு அரிசி வரவு

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, டிச. 14—

பல்வேறு நாடுகளிலிருந்து இவ்வாண்டு சனவரி முதல் டிசம்பர் 10-ம் நாள்வரை இந்தியாவுக்கு வந்து சேர்ந்த அல்லது கப்பலில் வந்துகொண்டிருக்கும் அரிசியின் மொத்த அளவு 4,37,600 டன்னாகும்.

திரு. டி. கேசவனின் கேள்விக்கு நாடாளுமன்ற மேலவையில் எழுத்து மூலம் பதிலளித்த உணவுத் துறை இணையமைச்சர் திரு. ஏ. பி. ஷிண்டே இத்தகவலை வெளியிட்டார்.

மனித உரிமை!

பாட நூலில் பாடல்

இலண்டன், டிச. 14—

பிரிட்டனில் நடைபெற்ற மனித உரிமை நாள் விழா நிகழ்ச்சிகள், இன ஒற்றுமை -- பெண்கள் உரிமை இவற்றை வற்புறுத்தும் வகையில் இருந்தன.

இரு பிரிட்டிஷ் கல்லூரிகளில் மனித உரிமை பற்றிய பாடங்களை பாடத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தவும் முடிவு செய்துள்ளனர்.

காண்டோம்

அடிக்கடி கருத் தரிப்பது உடல் நலத்தைக் கெடுக்கும் கருத் தரிப்பதைத் தள்ளிப் போடுவது எப்படி?

'காண்டோம்' (ரப்பர் கருவி) உபயோகிப்பதுமூலம் கருத் தரிப்பதைத் தடுக்கலாம்.

நீண்ட காலம் 'காண்டோம்' உபயோகப்படுத்துவதுகூட எந்த விதமான கெடுதலும் விளைப்பது இல்லை. தாம்பத்திய இன்ப வாழ்வைக் குறைப்பதும் இல்லை.

'காண்டோம்' கீழ்க்கண்ட இடங்களில் இலவசமாகக்கிடைக்கும்:—

எல்லா அரசினர் மருத்துவ மனைகள்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

மகப்பேறு மற்றும் குழந்தை மருத்துவமனைகள்.

விவரங்களுக்கு உங்கள் டாக்டரிடம் ஆலோசனை செய்யுங்கள்.

இராஜாஜி 91-வது பிறந்த நாள் விழா

பாராட்டுக் கூட்டத்தில் தலைவர்கள் புகழாரம்

சென்னை, டிச. 16—

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 91-வது பிறந்த நாள் விழா, டிச. 14-ம் நாள் மாலை சென்னை சிறுவர் அரங்கில் நடைபெற்றது.

திருமதி. எம். எஸ். சுப்புலட்சுமி—திருமதி இராதா ஆகியோர் பிரார்த்தனைக் கீதம் பாடினர்.

டாக்டர் எம். சந்தோஷம் எம்.பி அனைவரையும் வரவேற்றார்.

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள், விழாவிற்குத் தலைமை யேற்றார்.

சித்திரா நாராயணசாமி, திரு. ம. பொ. சிவஞானம், காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில், திருமதி சௌந்தரம் கைலாசம் ஆகியோர் இராஜாஜியின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

பின், முதலமைச்சர் அண்ணா அவர்கள், இராஜாஜியின் அரும் பெரும் பணிகளைப் பாராட்டிப் புகழாரம் சூட்டினார்.

திரு. எஸ். எஸ். மாரிசாமி நன்றி கூறினார்.

டில்லி அமைச்சரவையில் கருத்து வேற்றுமை

'இல்லை' என்கிறார் இந்திரா

புதுடில்லி, டிச. 14—

"நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு குறித்து முடிவு செய்வது தாமதப்படுவதற்குக் காரணம், புது வரி விதிப்பு மூலம் அதிக வருவாயைத் திரட்டும் யோசனை தொடர்பாக அமைச்சரவையில் கருத்து வேற்றுமை நிலவுவதுதான்" என்று கூறப்படுவதை, தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி நாடாளுமன்ற மேலவையில் மறுத்தார்.

உங்கள் குடும்பத்தைத் திட்டமிடுங்கள்

1. குடும்பத்தின் அளவைக் குறைக்க 'வாசக்டமி', பாதுகாப்பான எளிய வழி முறையாகும்.
2. இது நிரந்தரமானதொரு குடும்பக் கட்டுப்பாட்டு முறை இரண்டு குழந்தைகளையுடைய தம்பதிகளில், கணவன், 'வாசக்டமி' (அறுவை முறை) செய்து கொள்ளலாம்.
3. இந்த அறுவை முறையின் தன்மையைத் தாங்கள் உணர்ந்திருப்பதாகவும், தாங்கள் இதற்குச் சம்மதிப்பதாகவும் கணவனும் மனைவியும் தம்மிச்சையாக எழுதிக் கொடுக்க வேண்டும்.
4. இந்த முறை, ஒரு சில நிமிடங்களில் செய்யக்கூடிய மிகச் சாதாரணமான ஒன்று.
5. 'வாசக்டமி' செய்துகொண்டவர், மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டியது இல்லை; உடனடியாக வீட்டுக்குப் போய் ஓய்வு எடுக்கலாம்.
6. அறுவைக்குப் பின்னர் ஐந்தாவது நாளில் தையல் பிரிக்கப்படும்; அதன் பின்னர் வேலைக்குப் போகலாம்.
7. அறுவை செய்துகொண்ட தந்தை இரு மாதங்களுக்கு சைக்கிள் ஓட்டக் கூடாது.
8. அறுவை நடந்த எட்டு வாரங்களுக்குப் பின்னர்தான் விந்துவின் உயிர் அணுக்கள் இரா. எனவே, இந்தக் காலத்திற்குள், ஆண்--பெண் உறவு வைத்துக்கொள்வதானால் ரப்பர் சருவி உபயோகித்தல் வேண்டும்; இல்லையேல், கருத் தரிக்கும் வாய்ப்பு எண்டு.
9. 'வாசக்டமி' அறுவை முறை, உடல்நலத்திற்கு எந்தவிதமான கெடுதலும் விளைவிக்காது.
10. இந்த அறுவை முறை, ஆண்மையைக் குறைப்பது இல்லை; ஆண்-பெண் உறவுக்கு ஊறு விளைவிப்பதும் இல்லை; தாம்பத்திய வாழ்வு சாதாரணமாகத் தொடரத் தடை ஏதும் இல்லை.
11. வேலைசெய்யும் ஆற்றலுச்குக் குந்தகம் ஏற்படாது; ஜீரண சக்திக்குப் பாதகம் ஏற்படாது.
12. தமிழ்நாட்டில் மட்டும் 1959-லிருந்து ஏழு இலட்சம் 'வாசக்டமி' அறுவை முறை செய்யப்பட்டிருக்கின்றன எந்தவிதமான விரும்பத்தகாத விளைவுகள் பற்றியும் புகார் இல்லை.
13. அரசினர் மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், அரசு அங்கீகாரம் பெற்ற அறுவைச் சிகிச்சை நிலையங்களிலும் 'வாசக்டமி' இலவசமாகச் செய்யப்படும்.
14. பயிற்சி பெற்ற டாக்டர்கள் மட்டுமே இந்த ஆபரேஷன் செய்கிறார்கள்.
15. 'வாசக்டமி' ஆபரேஷன் செய்துகொண்டவர்கள் பின்னர் குழந்தை பெற விரும்பினால், அதற்கு வழிசெய்ய முடியும்.
16. அரசு அங்கீகாரம் பெற்ற இடங்களில், இந்த ஆபரேஷன் செய்துகொள்ளும் ஒவ்வொரு தந்தைக்கும் ரூ. 30 ரொக்கமாக வழங்கப்படுகிறது இந்தத் தொகை, ஆபரேஷனுக்குப் பின்னர் ஐந்து நாள் ஓய்வின்போது வருமானத்தை ஈடு கட்டுவதற்காகத் தரப்படுகிறது. இந்தத் தொகையைப் பெற ஒரு தந்தை 55 வயதுக்குக் குறைந்தவராகவும், இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகவும் இருத்தல் வேண்டும்.

இரண்டு குழந்தைகளுக்குமேல் உள்ளவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுக்குச் சிறந்த வழி, 'வாசக்டமி' அறுவை முறைதான்.

உங்களுக்கு அருகாமையிலுள்ள அரசினர் மருத்துவமனை அல்லது ஆரம்பச் சுகாதார நிலைய டாக்டரை அணுகி, தேவையான ஆய்வுரை உதவியும் பெறுங்கள்.

வேறு தேவையான விவரங்களைக் கீழ்க்கண்ட முகவரியில் பெறலாம்:—

நலப் பணிகள் — குடும்ப நலத் திட்ட இயக்குநர் அலுவலகம்; மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் அலுவலகம்; சேப்பாக்கம், சென்னை-5.

அரியானாவில் காங்கிரசு கரைகிறது!

300 ஊழியர்கள் முழுக்குப் போட்டனர்

ஹிஸ்ஸார், டிச. 13—

திரு. ஜனார்த்தன்தாஸ் குப்தா என்பவர், அரியானா மாநில ஹன்சி நகராட்சித் தலைவராக இருக்கும் காங்கிரசுப் பிரமுகர் ஆவார்; அவர் 300-க்கும் மேற்பட்ட காங்கிரசாருடன் கட்சியை விட்டுவிலகினார். இந்த ஊழியர்கள், ஹிஸ்ஸார் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள்.

விலகல் குறித்து அவர் ஓர் அறிக்கை விடுத்துள்ளார்; அதில் அவர் கூறியிருப்பதாவது:—

"காங்கிரசு மேலிடத்தின் சனநாயகமற்ற போக்கை எதிர்த்து நாங்கள் கட்சியைத் துறக்கிறோம்.

"காங்கிரசு மேலிடம் சர்வாதிகார முறைகளைக் கையாளுகிறது. அரியானா காங்கிரசுக்காரர்களை அது மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது."

மாசே-துங்குக்கு வாரிசாம்!

தைப்போ, டிச. 14—

செஞ்சீனத்து தற்காப்புத் துறை அமைச்சரான மார்ஷல் லியு பி பா வோ என்பவரை, மா சே-துங், தமது அடுத்த வாரிசாக நியமித்துவிட்டாராம்!

இத்தகவல், தைவான் செய்தி நிறுவன அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

'நேபா'வில் செஞ்சீனாவின் கைவரிசை!

புதுடில்லி, டிச. 14—

நேபா மக்களை அணுகும் கம்யூனிஸ்டுச் சீனா, அவர்களுக்கும் -- சீனருக்கும் உள்ள இன ஒற்றுமையை எடுத்துக் காட்டி, 'இந்தியாவுக்கும் -- அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை', என்று நம்பும்வகையில் மூளைச் சலவை செய்ய முயலுகின்றனர்!

மக்களவையில், சில நேபா மலைசாதி மக்கள் பயிற்சிக்காகக் கம்யூனிஸ்டுச் சீனாவுக்குத் தப்பியோடிவிட்டதைப்பற்றிய சரமாரியான கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் உள்துறை அமைச்சர் திரு. ஒய். பி. சவாண் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

குடும்ப நலத் திட்டம்

'லூப்' முறையின் நற்பயன்

1. லிப்பியின் லூப், கர்ப்பத் தடை செய்யவும், குழந்தைகளுக்கு இடையே போதிய இடைவெளி ஏற்படுத்தவும் பயன்படுகிறது.
2. மணமான பெண்களுக்கு, குடும்பக் கட்டுப்பாட்டுக்கு லூப் பொருத்தலாம்.
3. லூப் பொருத்துவதற்கு முன்னர், எத்தனைக் குழந்தைகள் பிறந்திருந்தாலும் இதனைப் பொருத்துவதில் தடை எதுவும் இல்லை.
4. லூப் சரியானபடி பொருத்தப்பட்டால், கணவனுக்கும் சரி—மனைவிக்கும் சரி—அது இருப்பதே தெரியாது.
5. டாக்டரால் ஒருமுறை லூப் பொருத்தப்பட்டால் போதும்; இதர சில முறைகளைப்போல மீண்டும் மீண்டும் கருத்தடைச் சாதனங்களைத் தேடிப் பெற வேண்டிய அவசியம் இதில் இல்லை.
6. தேவையானபோது இதை நீக்கிவிடலாம்; பின்னர் மீண்டும் கருத் தரிக்கலாம். இதனால், இந்த முறையைக் கையாள கணவன் -- மனைவியின் எழுத்து மூலமான சம்மதம் தேவையில்லை.
7. மீண்டும் குழந்தை பெற விரும்பினால், டாக்டரிடம் போய் லூப்பை எடுத்துக்கொள்ளலாம். பின்னர் ஒரு மாதத்திற்குள் மீண்டும் கருத் தரிக்கலாம். அதனால் கர்ப்பம் தரிப்பதற்கோ, பிறக்கும் குழந்தைக்கோ எந்தவிதக் கெடுதலும் இல்லை.
8. லூப் செலவில்லாத ஒன்று. இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தகுதியான பெண்ணுக்கும் இது இலவசமாகக் கிடைக்கும்.
9. நோய்—நொடி இருப்பதைக் கண்டுபிடிக்கவும், இருந்தால் அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கவுமான வாய்ப்பு, லூப் பொருத்த வரும் ஒவ்வொரு பெண்ணுக்கும் கிடைக்கிறது. பெண் உறுப்பில் உள்ள கோளாறுகள், புற்று நோய், காச நோய் போன்றவற்றைக் கண்டுபிடிக்கவும்—சிகிச்சையளிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.
10. இன்று நமக்குத் தெரிந்துள்ள முறைகளில், 'லூப் சிறந்தது' என்று இதுவரை வெளியான ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

வேறு விவரம் தேவையானால் கீழ்க்கண்ட இடங்களில் பெறலாம்:—

1. குடும்ப நலத் திட்டத் துணை இயக்குநர், நலப் பணிகள்—குடும்ப நலத் திட்ட இயக்குநர் அலுவலகம், சென்னை-6.
2. பெண்கள் --- குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8.
3. அரசினர் கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, திருவல்லிக் கேணி, சென்னை-5.
4. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை-10.

பதனீரிலிருந்து சர்க்கரை

நெல்லை மாவட்டத்தில் தொழிற்சாலை அமையும்

எட்டயபுரம், டிச. 14—

நெல்லை மாவட்டம் வேம்பணு கிராமத்தில் பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைத்து உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நெல்லை மாவட்டத்தில் நிறைய பனைமரங்கள் இருக்கின்றன; இவற்றை நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

"பனைமரங்களை நன்கு பயன்படுத்திக்கொள்ளவும், சர்க்கரை பஞ்சத்தைப் போக்கவும் ஒரு திட்டத்தைத் தயாரித்து வருகிறோம்.

"பதனீரிலிருந்து சர்க்கரை தயாரிக்கும் திட்டம்தான் இது; நெல்லை மாவட்டத்தில் இதற்காக ஒரு தொழிற்சாலை அமைக்கப்படும்; இதுபற்றிய விவரங்களை நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்."

புதுவையில் இந்தி எதிர்ப்பு

புதுவை, டிச. 12—

வானொலியில் இந்திச் செய்தியைப் புகுத்தப்படுவதை எதிர்த்துப் புதுவைக் கல்லூரி மாணவர்கள் கண்டன ஊர்வலம் நடத்தினர்; புதுவை காந்தி வீதியில் உள்ள அஞ்சல் நிலையம் பெயர்ப் பலகையில இந்தி எழுத்துக்களைத் தார் கொண்டு அழித்தனர்.

'டூபக்டமி'

[பெண்களுக்கான கருத்தடை அறுவை முறை]

'டூபக்டமி' மூலம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துங்கள்

பெண்களுக்குச் சிறந்த குடும்பக் கட்டுப்பாட்டு முறை

'டூபக்டமி' --- சாதாரணமாக, பிரசவத்திற்குப் பின்னர் மூன்றுவது நாள் செய்யப்படுகிறது.

இதைச் செய்து கொள்ளும் பெண் 24 வயது உடையவராகவும், இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்க வேண்டும்.

கணவன்---மனைவி இருவரும் உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட பின்னரே அறுவை செய்யப்படும்.

எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும் இது இலவசமாகச் செய்யப்படும்.

அறுவை செய்து கொள்ளும் தாய்மார்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 30 அலவன்சு தரப்படும்.

இந்த முறை உடல் நலத்தைப் பாதிக்காது; அன்றாட வேலைக்குத் தடையாக இராது.

இது, ஆண்--பெண் உறவுக்குக் குந்தகமாக இராது.

இந்த ஆபரேஷன் செய்து கொள்ள அருகாமையில் உள்ள அரசினர் பெண்கள் மருத்துவமனையில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

சிறிய குடும்பமே மகிழ்ச்சிகரமான குடும்பம்.

உங்கள் வாழ்வு முழுமையும் மகிழ்வு பெறக் குடும்பத்தை அளவோடு வைத்துக்கொள்ளுங்கள்.

அறிஞர் அண்ணா

சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

	ரூ. காசு
14-12-68 இதழ்த் தொடர்ச்சி	83,409.71
14-12-68 அன்று சென்னை மாவட்டக் கழகச் சார்பான கூட்டத்தில் கழகப் பொருளாளர் அவர்களிடம் அளிக்கப்பட்ட தொகை (விவரம் பின்னால்)	21637.05
தஞ்சை சுப்பிரமணியபுரம் இரா. இராசன்	100.00
சென்னை-3 தென்பிராந்திய இரயில்வே தலைமைப் பொருளாளர் அலுவலகத் தோழர்கள்	61.00
விருதுநகர் எம்.எஸ்.சி. நாராயணசாமி	51.00
சென்னை-52 நாரவாரிக்குப்பம் டவுன் பஞ்சாயத்துத் தலைவர் எம். துரைசாமி	51.00
புதுக்கோட்டை ராசா ஓவியன் ந. மாரிமுத்து	30.00
சென்னை 25-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் என்.வி.என். சோமு பி.ஏ.பி.எல்.	25.00
காஞ்சிபுரம்-1 எஸ். பிரகாசம்	25.00
செஞ்சி வட்டம் இல்லோடு தி. மு. க. கிளை	25.00
புளுகாண்டியூர் தி மு.க. கிளை	25.00
சென்னை-11 பெரம்பூர் டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம்	25.00
பரவை தாளமுத்து – நடராசன் படிப்பகம், ப. பிச்சை	25.00
மேட்டூர் தேக்கம் கலைஞர் மன்றம் சார்பில் அ. இராச மாணிக்கம்	25.00
சென்னை 6-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் கே. குசால்தாஸ் (இரண்டாம் தவணை)	26.00
திண்டுக்கல் டாக்டர் இரா. முனியப்பன்	25.00
சென்னை-5 க. சுப்பிரமணியம்	21.00
சந்திரபுரம் தி.மு.க.	20.00
திருச்செங்கோடு இரா. சண்முகம் பி.டி.	20.00
காஞ்சிபுரம்-2 மா. இளஞ்செழியன் எம்.ஏ.	15.00
கடையநல்லூர் காந்தி சிட் பண்டு உரிமையாளரும் தோழர்களும்	15.00
சென்னை-58 அம்பத்தூர் டி. இராமச்சந்திரன்	12.00
சென்னை-28 டி. ஆர். இராமானுசம்	11.00
சென்னை-2 வள்ளுவர் சேமியா – சிவா தொழிலகத் தோழர்கள்	11.00
துப்பட்டு தி. மு. க. சந்திரன்	11.00
தூத்துக்குடி சிவந்தகுளம் அப்துல் கரீம்	11.00
ஒத்தக்கடை பஞ்சாயத்துத் தலைவர் ஏ. பாண்டு	10.00
அரியமங்கலம் ஜி. எஸ். பழனிவேலு	10.00
அம்பத்தூர் மு. கோவிந்தராசன்	10.00
நெய்வேலி-3 ந. மன்னர்சாமி	10.00
வட்டத்தூர் து. இராமானுசம்	10.00
பூனா-3 கிர்க்கி எம். எஸ். இராதா	10.00
சென்னை-7 எம். அமிர்தவாசகம்	10.00
கல்கத்தா-1 எஸ். முகம்மது இஸ்மாயில்	10.00
சென்னை-44 எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி மாணவர்கள்	10.10
சென்னை-1 ஞானம்மாள் செல்வராசன்	10.00
மதுரை பி. ஏ. பாஸ்கரன் பி.ஏ.	10.00
சென்னை-12 எஸ். கோதண்டராமன்	10.00
சென்னை-7 சி. நீலகண்டன்	10.00
பூவாளூர் ம. விருத்தாசலம்	10.00
பாளையங்கோட்டை ராசா தாமஸ்	7.00
திருச்சி-14 ஐ. எம். யாகூப் மூலம்	6.00
திருமங்கலம் காவடி வேல் முருகேசன்	5.00
சோமலூர் கோ. வி. பழனிசாமி	5.00
புதுவை-4 டி. சிங்காரவேல்	5.00
மதுரை-18 ஜி. வெண்ணிலா—மலர்விழி	5.00
சென்னை-1 நால்வர் நண்பர் குழாம் சார்பில்	5.00
சென்னை 99-வது வட்ட தி. மு. க. டி. கே. கபாலி	5.00
பழங்கூர் பஞ்சாயத்துத் தலைவர் ஜே. கே. அண்ணாமலை	15.00
வண்டலூர் ஸ்டாண்டர்டு மோட்டார் ஐ. அண்டு எம். பகுதித் தோழர்கள்—சி. கந்தசாமி மூலம்	30.00
சென்னை-5 சாந்தா நாராயணன் (ரங்கோலி)	10.00
நெல்லை-2 ஆ. ச. கணபதி	5.00
சேலம்-1 எஸ். கந்தசாமி	5.00
சென்னை-5 எஸ். ஏ. எம். உசேன்	5.00
வைரிசெட்டிபாளையம் என். துரைசாமி	5.00
கரிவலம்வந்தநல்லூர் சி. சுந்தரராசன்	5.00
தூத்துக்குடி-1 பி. கள்ளிமுத்து	5.00
சென்னை-3 பி. ஏ. முகமது கனி	5.00
சென்னை-7 ஆர். எஸ். மணி	5.00
கலவை பி. ஏகாம்பர முதலியார்	5.00
இராணிப்பேட்டை வி. கிருஷ்ணமூர்த்தி	5.00
திருவரங்கம் முத்தமிழ்க் கலைமன்றம்	5.00
சோலையார்நகர் அண்ணா கோ. இராமகிருஷ்ணன்	5.00
பெங்களூர்-1 என். எஸ். நடராசன்	5.00
வரகூர் கே. ஜி. கணேசன்	5.00
குடியேற்றம் பி. ஜி. இராசன்	5.00
,, 10-வது வட்டம் பகுத்தறிவு இளைஞர் மன்றம்	5.00

ரூ. 3 அனுப்பிவைத்தோர்:—

மதுரை கரிமேடு சந்திரசேகரன், திட்டக்குடி மு. சுந்தரம், மதுரை-2 ஆல்பர்ட் செயராமன், தூத்துக்குடி ஆர். ஏ. முனுசாமி, அப்பன் திருப்பதி ஏ. எஸ். திருமுகம், மதுரை-2 எஸ். அப்துல் ஜப்பார், மதுரை-9 தெ. குருசாமி, மதுரை-2 டி. மோகன் ஆகிய எட்டு பேர் 24.00

ரூ. 2 வீதம் அனுப்பிவைத்தோர்:—

திண்டுக்கல் தண்டபாணி நண்பர்கள் (2.50), சோழவந்தான் எஸ். கதிரவன், திட்டச்சேரி ரகீது மரக்காயர், எலப்புள்ளி மாப்பட்டி, சிவகிரி துரை பத்மநாபன் ஆகிய 5 பேர் 10.50

ரூ. 1 வீதம் அனுப்பிவைத்தோர்:—

மதுரை பி. சந்திரன், எருமாங்குப்பம் துறவரசன் ராதை, ஆதனக்கோட்டை மில்லர், திருச்சி டி. வி. சீனிவாசன், ஆமதாபாத் மணிநகர் டி. சண்முகம் ரூ. (1.11) ஆகிய 5 பேர் 5.11

ஆக மொத்தம் 1,06,070.47

நடக்க இருப்பவை

17--12--68

பரவாக்கோட்டை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; பேசுவோர்: ஏ. பி. மனோன்மணி, சு. நாராயணசாமி, இரெ. கணேசன், மற்றும் பலர்.

குடும்ப நலத் திட்ட விழா

குடும்ப நலத் திட்ட இரு வார விழாவையொட்டி, 17—12—68 மாலை 6-30 மணிக்கு, சென்னை—இராயப்பேட்டை லாயிட்ஸ் ரோடு மாநகராட்சிப் பள்ளித் திடலில் (வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு எதிரில்); தலைவர்: மேயர் வேலூர் நாராயணன்; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, ஏ. பி. சனார்த்தனம் எம்.எல்.சி., டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., என். அனந்தபத்மநாபன் ஐ. ஏ. எஸ்., எம். அரங்கநாதன் எம்.சி.

புதுவையில்

மாபெரும் ஊர்வலம்

புதுச்சேரி, டிச. 15—

புதுவையில் நேற்று ஒரு மாபெரும் தேர்தல் பிரசார ஊர்வலம் -- கூட்டணியின் சார்பில் -- நடந்தது.

ஊர்வலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படம் சுமார் 6-அடி உயரத்தில் கண்ணாடியினுள் பதியப்பட்ட ஒரு டிராக்டரில் -- தி. மு. க. கொடிகள் பறக்க -- எடுத்துச் செல்லப் பட்டது.

ஒரு காரில் அண்ணா, மற்றும் தமிழக அமைச்சர்கள் படங்களும், எம். ஜி. ஆர். படமும் அலங்கரிக்கப்பட்டு தி. மு. க. கொடிகள் பறக்க டிராக்டருக்கு முன்னால் வந்தது.

ஆயிரக்கணக்கானவர்கள் சைக்கிளில் தத்தம் கட்சிக் கொடிகளைக் கட்டிக்கொண்டு ஊர்வலத்தில் வந்தனர்.

முன்னாள் புதுவை முதலமைச்சர்கள் குபேர், பரூக் மரைக்காயர், கம்யூனிஸ்டுத் தலைவர் சுப்பையா, மற்றும் கூட்டணியின் முக்கியத் தலைவர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும் ஊர்வலத்தில் சென்றனர்.

அறிஞர் அண்ணா

ஓய்வெடுக்கும் நாள்

சென்னை, டிச. 16—

அறிஞர் அண்ணா அவர்கள் இப்போது சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் ஓய்வெடுத்துக்கொள்வது, இருக்கின்ற அலுவல்கட்கு ஒத்துவரவில்லை.

எனவே, வாரத்தில் வேறு நாட்களில் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்றிருப்பதாக அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

எங்கிருந்தாலும் வாழ்க!

சிவாஜி கணேசனுக்கு அண்ணா வாழ்த்து

'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தாய்போல்...' பெருமிதம்

பொன்னாடை போர்த்திப் பாராட்டுரை

சென்னை, டிச. 15—

"தமிழ்நாட்டில் ஒரு கலைக் குடும்பமே இருக்கிறது; இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் -- அண்ணன் ஓர் இடத்திலும், தம்பி ஓர் இடத்திலும் இருக்கலாம்; பிறந்தது ஓர் இடமாகவும், வளர்வது ஓர் இடமாகவும் இருக்கலாம்; கர்ணன்கூட ஓர் இடத்தில் பிறந்தான் -- இன்னோர் இடத்தில் வளர்ந்தான்; அந்த வேடத்தில் சிவாஜி கணேசன் கூட நடித்திருக்கிறார்; அவர் பிறந்தது ஓரிடம் -- இன்று இருப்பது இன்னொரு இடமாக இருந்தாலும், குந்தி தேவி நிலையிலே இன்று அவரைக் கண்டு மகிழ்கிறேன்.

"இந்த அரும்பு மலருவதற்கு முன்னரே, 'இது மலரும்—மணம் பரப்பும்' எனக் கூறியவன் நான; மலர்ந்த மலரின் மணத்தை நுகரப் பல துறையினரும் இங்கு வந்திருப்பது கண்டு பெருமிதமடைகிறேன்"

"அவர் தொலைதூரத்தில் இருந்தாலும், 'பெருமையோடு இருக்கிறார்' என்பதை அறிந்து, 'அவர் எங்கிருந்தாலும் வாழ்க' என்று வாழ்த்துகிறேன்"

என்று முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், சிவாஜி கணேசனுக்கு நடந்த பாராட்டு விழாவில் அவருக்குப் பொன்னாடை போர்த்திப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிவாஜி கணேசன் 125 படங்களில் நடித்து முடித்ததைப் பாராட்டவும், 'பராசக்தி' படத்தை உருவாக்கியதில் பங்கு கொண்ட திரு. மு. கருணாநிதி, ஏ.வி. மெய்யப்பன், பி. ஏ. பெருமாள் இயக்குநர்கள் கிருஷ்ணன் – பஞ்சு ஆகியோரைச் சிறப்பிக்கவும் சென்னை—மயிலாப்பூர் இராசேசுவரி திருமண மண்டபத்தில் இன்று விழா நடைபெற்றது.

நகரப் பிரமுகர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த விழாவிற்கு வந்திருந்தோரை நகர ஷெரீப் சுந்தர்லால் நகாதா வரவேற்றார்.

விழாவுக்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. ஒய். பி. சவாண் தலைமைவகித்தார்.

மேடையில் அறிஞர் அண்ணா, மத்திய செய்தித்துறை அமைச்சர் கே. கே. ஷா, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மத்திய துணையமைச்சர் கே. எஸ். இராமசாமி ஆகியோருடன் ஏ. வி. மெய்யப்பன், பி. ஏ. பெருமாள், இயக்குநர்கள் கிருஷ்னன் – பஞ்சு, சிவாஜி கணேசன், எஸ். எஸ். வாசன் ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

திரு. கே. கே. ஷா, விழாவைத் துவக்கிவைத்தார்.

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மத்திய உள்துறைத் துணையமைச்சர் கே. எஸ். இராமசாமி, எஸ்.எஸ். வாசன், முரசொலி மாறன் எம்.பி, சவுந்தரா கைலாசம் ஆகியோர் பேசினர்.

சிவாஜி கணேசனுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பொன்னாடை போர்த்தினர்; 'பராசக்தி' படத் தயாரிப்பில் பங்குகொண்ட ஏ. வி. மெய்யப்பன், பி. ஏ. பெருமாள், இயக்குநர்கள் கிருஷ்ணன்--பஞ்சு ஆகியோருக்கு அறிஞர் அண்ணா அவர்கள் மாலை அணிவித்தார். வேலைப்பாடுமிக்க தஞ்சைத் தட்டு கணப் பரிசாக வழங்கினர்.

திரு. மு. கருணாநிதி அவர்கள் உடல் நலமின்மையால் விழாவுக்கு வரவில்லை' அவருக்குப் பதிலாக அண்ணா அவர்களுக்கே மாலை அணிவிக்கப்பட்டது.

விழா இறுதியில் மத்திய உள்துறை அமைச்சர் சவான், தமது தலைமை உரையை நிகழ்த்தினார்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்களுக்கு சிவாஜி கணேசன் நன்றி தெரிவித்துப் பேசினர்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மத்திய அரசுக்கு கண்டனக் கடிதம் எழுதியிருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"காலை 8 மணிக்கு ஆங்கிலச் செய்தி அறிக்கை ஒலிபரப்பும் நேரத்தில் இந்திச் செய்தி ஒலிபரப்பப்படுவதால், இந்தி ஆதிக்கம் கொல்லைப்புற வழியாக நிலைநாட்டப்படும் முயற்சி நடக்கிறதோ என்று எண்ணுவதற்கு இடமேற்பட்டுள்ளது; அனுவசியமாக இந்த மாறுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

"அன்றாடம் அலுவலகங்களுக்குச் செல்லுமுன் வானொலியில் காலைச் செய்தி கேட்கும் வழக்கமுள்ளவர்களுக்கு இந்தப் புதிய ஏற்பாடுகள் இடையூறாக இருக்கும்' மேலும், இந்த மாறுதல் வேண்டுமென்றே --- எவ்விதக் கோரிக்கையும் எவரிடமிருந்தும் வராத நிலையில்--செய்யப்பட்டிருக்கிறது.

"மத்திய அரசில் உள்ள ஒரு பிரிவினருக்கு இந்தி ஆதிக்கத்'தில் அக்கறை உள்ளதாகக் கூறப்படுகிறது.

"'இந்தி ஆதிக்கத் திட்டத்தில் இது ஒரு பகுதியாக இருக்கலாம் என்று மக்கள் ஐயப்படுவதற்கு இது இடமளித்துள்ளது."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.